


மனைப்பிரிவு

தென்காசி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

தென்காசி மாவட்டம்

கடையநல்லூர் வட்டம்

கடையநல்லூர் ஒன்றியம்

நயினாரகரம் ஊராட்சி

நயினாரகரம் கிராமம்

சர்வே எண் :**292/4B1A** ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு = 1:400 இணையதள விண்ணப்பம் எண்: **KSDQ03PO**

குறிப்பு:

மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு = 9892.00ச.மீ (2.44ஏக்கர்)

உத்தேச சாலையின் பரப்பளவு (-) = 2956.09ச.மீ

மீதமுள்ள பரப்பு = 6935.91ச.மீ

கோரிய மனைகள் - 46

ஒதுக்கிய மனைகள் - 39

மனைப்பிரிவு இடத்தின் எல்கை

நிலையில் உள்ள சாலை

ஒதுக்கீடுகள் -

பொது ஒதுக்கீடுகள் -

நயினாரகரம் ஊராட்சிக்கு தான பத்திர ஆவண எண்: 2995/2025, நாள்.11.07.2025 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை

i) உத்தேச சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு = 2956.09 ச.மீ

ii) பொது உபயோகம் உள்ளாட்சி **(Public Purpose) A** = 39.24 ச.மீ (0.56%)

iii) பொது உபயோகம் **(TANGEDCO) B** = 37.74 ச.மீ (0.53%)

கட்டிடவரம்பு:

7.2மீ மற்றும் 9.0மீ அகல சாலைக்கு = 1.5மீ

மூலைமுடக்கு:

7.2மீ, 9.0மீ அகல சாலைகளுக்கு = 1.50மீ✕1.50மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண்:71, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை, நாள்:16.08.2003-ன்படி நில உரிமம் குறித்து தலைவர், நயினாரகரம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் சாலைகள், திறவிடம் மற்றும் பொது உபயோகம் ஆகியவற்றின் நிலப்பரப்பினை உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் (ம) நிலஆர்ஜிதம் செய்துதரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் தலைவர், நயினாரகரம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும்.
4. அரசாணை நிலை எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020-ன் படி தலைவர், நயினாரகரம் ஊராட்சி அவர்கள் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
5. மனைப்பிரிவு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஓடை , கால்வாய் போன்ற பொது நீர்வழிப்பாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும் , அரசு புறம்போக்கு நிலங்களில் மேற்படி மனைப்பிரிவு அமையவில்லை என்பதையும் தலைவர், நயினாரகரம் ஊராட்சி அவர்கள் அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
6. மேற்படி மனைப்பிரிவின் அனுமதியானது செயற்பொறியாளர் நீ.வ.து. அவர்களின் கடிதம் ந.க.எண்:265M வ.பி/இவ.அ-1/கோ.11A/2024,நாள்.10.10.2024 -ன் அடிப்படையில் வழங்கப்படுகிறது.
7. மனைப்பிரிவு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ ஓடை, கால்வாய் போன்ற பொது நீர்வழிப்பாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும்,அரசு புறம்போக்கு நிலங்களில்மேற்படி மனைப்பிரிவு அமையவில்லை என்பதையும் தலைவர், நயினாரகரம் ஊராட்சி அவர்கள் அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
8. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6x4 என்ற அளவில் நிரந்தர தகவல் பலகைமூலம் பெதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
9. மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.
10. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இம்மனைப்பிரிவிற்க்கான அனுமதிக்கான ஆணையுடன் நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

ம.வ/தெமாநஊஅ எண்-SWP/ 39 /2025

Signature valid

Signed by: Assistant Director
Location:Tenkasi
Date:2025.07.21 18:55:31

Signature valid

Signed by: Village Panchayat President
Location:Tenkasi
Date:2025.08.12 13:[illegible]:48

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்.